©
தமிழ்நாடு அரசு
2018

பதிவெண்: எம் 2

# ஈரோடு மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

ஈரோடு, ஜூன் 8, 2018

[விளம்பி, வைகாசி 25 – திருவள்ளுவர் ஆண்டு 2049]

[எண் 11

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

*[ந.க. 2515/2017/ (அ-1), நாள்: 25.05.2018]*

ஈரோடு மாநகராட்சி

பொது அறிவிப்பு

தமிழ்நாடு அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.11, நாள்.12.01.1999–ல் 1992 ஆம் ஆண்டு தொழில்வரி விதித்தல் மற்றும் வசூல் சட்டத்தை திருத்தம் செய்து புதியதாக தொழில்வரி விதிப்பது மற்றும் வசூல் செய்வது தொடர்பாக மாநகராட்சிகளின் சட்டம் 169B பிரிவு 13(2) உட்பிரிவின்படி புதியதாக தொழில்வரி விதிகள் 1999 என வெளியிட்டு தமிழ்நாடு அரசிதழ் பிரத்யோகம் எண் 758, நாள் 28.12.98–ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி தொழில்வரி விதித்தல் தொடர்பான சட்டம் 16–ன்படி ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் கட்டண விகிதம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். எனவே புதிய தொழில்வரி 01.10.2018 முதல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் இதன்மூலம் அனைவருக்கும் அறிவிக்கப்படுகின்றது. புதிய தொழில்வரி நிர்ணயத்தை 24.05.2018 ஆம் தேதிய 43 ஆவது எண்ணிட்ட மாநகராட்சி தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | சராசரி அரையாண்டு வருமானம் | தற்போதுள்ள தொழில்வரி ரூ. | உயர்த்தப்பட்ட வரி ரூ. |
|---|---|---|---|
| 1. | ரூ. 21000 வரை | இல்லை | – |
| 2. | ரூ. 21001 முதல் 30000 வரை | 118 | 148 |
| 3. | ரூ. 30001 முதல் 45000 வரை | 294 | 368 |
| 4. | ரூ. 45001 முதல் 60000 வரை | 587 | 734 |
| 5. | ரூ. 60001 முதல் 75000 வரை | 880 | 1100 |
| 6. | ரூ. 75001 முதல் அதற்கு மேல் உள்ளது | 1173 | 1250 |

இதர விவரங்களை மாநகராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஈரோடு,
25.05.2018.

**மு. சீனி அஜ்மல்கான்,**
ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.